ISSN (ONLINE): 3107-7862

# Mental Healthcare Act - 2017

## Safeguarding Patient Rights and the Role of Mental Health Review Boards

திரு. S. பாலராஜமாணிக்கம் MA, BL, முன்னாள் மாவட்ட நீதிபதி / தலைவர், மனநல மீளாய்வு மன்றம், திருச்சி.
செல்வி. R. அகிலா MSW, PGDC, மனநல ஆலோசகர், அறம் மருத்துவமனை, திருச்சி.

Tamil Psychiatry Journal, Vol-2, Issue-2, Apr-Jun 2026, Page 1-5

மனநல மீளாய்வு சட்டம் - 2017 (Mental Healthcare Act, 2017) என்பது மனநல சிகிச்சை பெறும் நபர்களின் உரிமைகளை பாதுகாக்கவும், மனநல மருத்துவமனைகள் மற்றும் மருத்துவர்களின் செயல்பாடுகளை கண்காணிக்கவும் அரசால் உருவாக்கப்பட்டது. மனநல மீளாய்வு மன்றம் என்பது சட்டபூர்வமான Mental Healthcare Act 2017-ன் படி நியமிக்கப்பட்டுள்ள நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு இணையான மன்றங்களாகும். இம்மன்றங்களை நியமனம் செய்வது மற்றும் உருவாக்குவது என்பது அரசின் சட்டபூர்வமான கடமை. இதன் அடிப்படையில் தமிழ்நாடு மாநிலத்தில் 13 பிராந்திய மன்றங்கள் (REGIONAL BOARD) உருவாக்கப்பட்டுள்ளது. இதில் திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களுக்கான பிராந்திய மன்றம் (REGIONAL BOARD) திருச்சி மாவட்டத்திலுள்ள கி.ஆ.பெ. மருத்துவக்கல்லூரி வளாகத்தில் இயங்கி வருகிறது.

**இந்த வாரியத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பொதுவாக:**

1. தலைவர், ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி
2. மனநல மருத்துவர்
3. மருத்துவ நிபுணர்
4. மனநலம் பாதிக்கப்பட்டவர்களின் பிரதிநிதி
5. மற்ற தகுதியான உறுப்பினர்கள் (மனநல ஆலோசகர், மனநலத்துறை செவிலியர்கள் மற்றும் சமுகப்பணியாளர்)

ஆகியோர்கள் சேர்ந்து நோயாளிகளின் சிகிச்சை மற்றும் சமூக நலனை உறுதி செய்வதில் முக்கிய பங்கு வகிக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

2006-ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையில் நிறைவேற்றப்பட்ட மாற்றுத் திறனாளி நலனுக்காக ஏற்படுத்தப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் இந்திய அரசாங்கம் அந்தத் தீர்மானத்தை ஒப்புக்கொண்டு, அதன் இடைப்பட்ட காலத்தில் உச்சநீதிமன்றத்தின் அறிவுறுத்தலின் படி இந்த மனநல மீளாய்வு சட்டம் - 2017 புதுப்பிக்கப்பட்டது. இந்த சட்டம் 2018 இல் இந்தியாவில் அமலுக்கு வந்த பின், இந்த சட்டம் சட்டபூர்வமான கடமையாக உருவாக்கப்பட்டது.

**மனநல மீளாய்வு மன்றத்தின் நோக்கங்கள்:**

மனநோயாளிகளுக்கு ஏற்பட்டுள்ள மன நோயின் தீவிரத்தின் தன்மையைப் பொறுத்து தன்னைத் தானே கவனித்து கொள்வதற்கும், பிறர் தன்னை சரியாக நடத்துகிறார்களா என அறிந்து கொள்வதற்கும் இயலாத நிலை ஏற்படும். இதனால், மனநோயாளிகளின் உரிமைகளை நிலைநாட்டி, சமுதாயத்தில் வாழும் உரிமையை அளிப்பதும், மனநோயாளிகளின் மனநலம் காப்பதுமே இம்மன்றத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

**இந்த சட்டம் தொடர்பாக அறிந்து கொள்ள வேண்டிய முக்கிய அம்சங்கள்:**

✧ மனநல பாதுகாப்புச் சட்டம் - 2017-ன் படி அமைக்கப்பட்டுள்ள மீளாய்வு மையங்கள் சட்டப்பூர்வமான கடமைகளை நிறைவேற்றுவதற்கு உருவாக்கப்பட்ட நிரந்தர அமைப்புகள் ஆகும்.

✧ மன நோயாளிகளுக்கு அளிக்கப்படும் மனநல சிகிச்சை தொடர்பாக நோயாளியின் மனு மூலம் (Advance Directive) நோயாளியின் முழு விவரங்கள் பற்றி இந்த மன்றத்திற்குத் தெரிவித்து பதிவு செய்யப்படும். அவ்வாறு பதிவு செய்யப்படும் பட்சத்தில் அந்த பதிவின் அடிப்படையில்தான் சிகிச்சை அளிக்க வேண்டும்.

✧ மனநல நோயாளிகள் தங்களுக்கான "நியமிக்கப்பட்ட பிரதிநிதியை" (NOMINATED REPRESENTATIVE) நியமனம் செய்வதற்கும் உரிமை உண்டு. மன நோயாளிகளுக்கான

ISSN (ONLINE): 3107-7862

சிகிச்சைக்கு ஒத்துழைப்பு அளிக்கவும், அதன் தொடர்பாக அவர்களை கவனித்துக் கொள்வதற்கும், குடும்பத்தில் யாரேனும் ஒருவரை நியமிக்கும் வாய்ப்பு உள்ளது .

- ✧ மன நோயாளிகளுக்கு தேவையான தகுந்த சிகிச்சை அளிக்கப்படுகிறதா என சம்மந்தப்பட்ட மருத்துவமனை, மனநல காப்பகம் மற்றும் மறுவாழ்வு மையம் போன்ற மனநலத்திற்காக நிறுவப்பட்டுள்ள நிறுவனங்களை ஆய்வு செய்வதற்கும், தகுந்த உத்தரவுகள் வழங்குவதற்கும் இந்த சட்டம் வழிவகை செய்கிறது. அதுமட்டுமின்றி, மனநோயாளிகளுக்கான உரிமைகள் தகுந்த முறையில் வழங்கப்படுகிறதா என்பதை ஆய்வு செய்வதற்கும் இம்மன்றம் துணைபுரிகிறது.
- ✧ மனநோயாளியின் பாதுகாப்பையும், உரிமைகளையும் பாதுகாக்கும் பொருட்டு, இம்மன்றத்தின் உத்தரவுகளை அந்த மனநல மருத்துவமனையோ அல்லது மனநல காப்பகமோ நிறைவேற்ற தவறும் பட்சத்தில், மனநல மீளாய்வு மன்றத்திற்கு சம்மந்தப்பட்ட மருத்துவமனைக்கோ அல்லது மனநல காப்பக்கத்திற்கோ ரூபாய் 5,00,000/- அபராதம் விதித்து, அந்த மனநல மருத்துவமனை அல்லது அந்த மனநல காப்பகத்தின் சிகிச்சை தொடர்பாக வழங்கப்பட்ட உரிமத்தை ரத்து செய்வதற்கும் அதிகாரம் உள்ளது.
- ✧ இந்த சட்டத்தின் கீழ் மனநல நோயாளிகள் 18 வயதிற்கு கீழ் உள்ளவர்கள் என்றால், அவருடைய இயற்கை பாதுகாவலர் அதாவது தாய், தந்தை போன்றோர்கள் NR(NOMINATED REPRESENTATIVE) ஆக நியமிக்கப்பட வேண்டும். இயற்கை பாதுகாவலர் இல்லாவிடில், அந்த மனநல நோயாளிகளுக்கு நியமிக்கப்பட்ட பிரதிநிதியாக, அம்மனநல நோயாளியின் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட நெருங்கிய உறவினர்களோ அல்லது நண்பர்களோ நியமிக்கப்படலாம். அவ்வாறான நபர்கள் இல்லாத பட்சத்தில் சமூகப்பணியாளர் துறைக்கு வேண்டுகோள் அனுப்பி, அந்தத் துறை சம்மந்தப்பட்ட அதிகாரிகளை நியமிக்கப்பட்ட பிரதிநிதியாக நியமனம் செய்யலாம்.

**நியமிக்கப்பட்ட பிரதிநிதிக்கும் பாதுகாவலருக்கும் இடையே உள்ள வேறுபாடுகள்:**

- ✧ நியமிக்கப்பட்ட பிரதிநிதி என்பவர், மனநோயாளியின் மருத்துவத்திற்கான முடிவுகளை எடுப்பதற்கும், அவர்களுடைய உரிமைகளை பாதுகாப்பதற்கும் மீளாய்வு மன்றத்தால் நியமிக்கப்படும் நபர் ஆவார். ஆனால் Guardianship என்பது சொத்து சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம் ஆகும்.
- ✧ Guardianship பெற்றுக்கொள்வது என்பது இம்மன்ற அதிகார வரையறைக்கு உட்பட்டதல்ல. பாதுகாவலர் மற்றும் சொத்து தொடர்பான அதிகாரம் மாவட்ட ஆட்சியரிடம் சமர்ப்பித்து, மாவட்ட நீதிமன்றம் மூலமாக கொண்டு செல்ல வேண்டும். இந்தப் பாதுகாவலர் மற்றும் சொத்து சம்மந்தப்பட்ட விஷயங்களை மேற்கொள்வதற்கு, மனநோயாளிகளுக்கு என்று சட்டப்பூர்வமான தகுந்த ஆலோசனைகள் வழங்குவதற்கு நீதிமன்றங்களில் செயல்படும் இலவச சட்ட மையங்கள் மூலமாக தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ள மனநல பாதுகாப்புச் சட்டம் -2017 -ல் உரிமை உள்ளது .
- ✧ 2017 சட்டத்தின் கீழ் பாதுகாவலர் நியமிப்பதற்கு இந்தச் சட்டத்தில் அதிகார வரையறை இல்லை.
- ✧ இயற்கை பாதுகாவலர் அல்லது சட்டப் பூர்வமான பாதுகாவலர் (legal guardian) ஒரு Minor மனநோயாளிக்கு இருக்கும் பட்சத்தில் அவர்களை NOMINATIVE REPRESENTATIVE (NR) பிரதிநிதியாக நியமிக்கலாம்.
- ✧ சட்டபூர்வமான பாதுகாவலர் (LEGAL GUARDIAN) என்பவர் MINOR மற்றும் மன நோயாளிகளுக்கு சொத்து சம்பந்தமான பிரச்சனைகளையும் கையாளுவதற்கு உரிமை உண்டு. இம்மன்றத்தால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி, மனநோயாளிக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு பராமரிப்பதற்கு தேவையான உதவிகள் செய்வதற்கு உரிமை உள்ளது. இந்தச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட பிரதிநிதி NR மற்றும் பாதுகாவலர் என்பவர்கள் சட்டபூர்வமாக வெவ்வேறு நபர்களாகும்.

- ✧ 2017 சட்டத்தின்படி MINOR (இளவர் சிறுமி) மனநலத்திற்கு சிகிச்சை எடுக்கும் பட்சத்தில் அவருக்கான பிரதிநிதி பெண் பாலராக நியமிப்பது சிறந்ததாகும். ஆண் பிரதிநிதி நியமிக்கப்படும் பட்சத்தில் அந்த சிறுமிக்கான அட்டெண்டர் (attender) பெண் பாலராக ஏற்பாடு செய்து தர வேண்டும்.
- ✧ பிரதிநிதி நியமிக்கப்படும்பொழுது மனநோயாளிக்கான சிகிச்சை அளிப்பதற்கும், மன நோயாளிக்கான சிகிச்சைக்கு ஒப்புதல் அளிப்பதற்கும் அவருக்கு உரிமை உண்டு. மன நோயாளியின் நலன் சார்ந்து அவர் செயல்பட வேண்டும்.
- ✧ மன நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சையின் விவரங்களை நோயாளிகளுக்கும் தெரியப்படுத்துவது நியமிக்கப்பட்ட பிரதிநிதியின் கடமை ஆகும்.

**மனநல பாதுகாப்புச் சட்டம் 1987 மற்றும் 2017 ஆம் ஆண்டிற்கும் இடையே உள்ள வேறுபாடுகள்:**

- ✧ மனநல பாதுகாப்புச் சட்டம் 1987 மனநோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சை மற்றும் பராமரிப்பிற்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி குறிப்பாக ஏதும் இந்த சட்டப்பிரிவில் கூறப்படவில்லை. அதுமட்டுமின்றி இந்த சட்டத்தில் மனநோயாளிகளின் நலன்களை காப்பதற்கு எவ்வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம் என குறிப்பான சட்டப் பிரிவுகளும் மனநல பாதுகாப்புச் சட்டம் 1987 ன் படி ஏற்படுத்தப்படவில்லை.
- ✧ இதை ஒப்பிடுகையில், மனநல பாதுகாப்புச் சட்டம் 2017ல் மனநல நோயாளி தனக்கு சிகிச்சை எவ்வகையில் அளிக்கப்பட வேண்டும் என முன்கூட்டியே பதிவு செய்து கொள்வதற்கும், எவ்வாறான சிகிச்சையை அளிக்கப்படவேண்டும் (ADVANCE DIRECTIVE) என இம்மன்றம் நேரடியாகவோ அல்லது நியமிக்கப்பட்ட பிரதிநிதியின் மூலமாகவோ தெரிந்து கொண்டு குறிப்பிட்ட சிகிச்சையை எதிர்கொள்வதற்கும் அந்த மன நோயாளி அனுமதிக்கப்பட்ட மனநல மருத்துவமனையிலோ அல்லது மனநல காப்பகத்திலோ சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுவதற்கும், சிகிச்சைகளில் இருந்து நீக்கம் செய்வதற்கும் சட்ட ரீதியான வழிமுறைகளை மேற்கொள்வதற்கு இந்த சட்டத்தில் இடம் உள்ளது. இவ்வகையில் இரண்டு சட்டங்களுக்கும் முக்கிய வேறுபாடுகள் இருந்து வருகிறது. எனவே இந்த மனநல பாதுகாப்புச் சட்டம் 2017-ன் படி மனநல நோயாளியின் நலன் காக்கும் சட்டமாகவும் இந்தச் சட்டம் இயங்கி வருகிறது என்பது குறிப்பிடதக்கது. இந்தச் சட்டம் ஏற்கனவே நீதிமன்றங்களில் மனநோய் சம்பந்தமான தரப்பினர்களுக்கு பிரச்சனை ஏற்பட்டு மறுத்து உரைக்கப்படும் பட்சத்தில் மாவட்ட நீதிமன்றத்தை அணுகி தீர்க்கப்பட வேண்டும் என்பதை 2017 சட்டப்படி அதற்கான அதிகார வரம்பு இம்மன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**மனநல மற்றும் உளவியல் துறையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு மனநல மீளாய்வு மன்றத்தின் சட்ட ஒழுங்குமுறை மற்றும் நெறிமுறைகளைப் பற்றிய தேவையான புரிதல்களும் அதற்கான பயிற்சிகளும் எந்த அளவிற்கு உள்ளது?**

- ✧ மனநலம் மற்றும் உளவியல் துறையில் இருக்கும் ஊழியர்களுக்கு மனநல மீளாய்வு மன்றத்தின் சட்ட ஒழுங்கு மற்றும் நெறிமுறைகள் பற்றிய தேவையான புரிதல்களை குறித்து அரசு தரப்பில் பயிற்சி முகாம்கள் சில நடத்தப்பட்டது. மனநலம் சம்பந்தமாக விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு மாவட்ட ஆட்சியர் உள்ளடங்கிய குழு சமீபத்தில் ஏற்படுத்தப்பட்டது. இந்த மன்றத்தில் மாவட்ட ஆட்சியர் ஒரு உறுப்பினராக நியமிக்கப்பட்டு அவருடைய மேற்பார்வையில், சமுகப்பணியாளர் (Disabled) மூலமாகவும் இப்பயிற்சி முகாம்கள் அவ்வப்போது நடைபெற்று வருகின்றன.
- ✧ ஆனால், அரசாங்க உதவியோடு எல்லா மனநல மீளாய்வு மன்றங்களையும் ஒருங்கிணைத்து போதிய பயிற்சி முகாம்கள் நடத்தப்பட வேண்டும். அதுமட்டுமின்றி, மாவட்ட ஆட்சியர், Dean of Medical College, Psychiatry HOD மற்றும் பல மனநல மருத்துவ நிபுணர்கள், சமுகப்பணியாளர் (Disabled) என அனைவரையும் ஒருங்கிணைத்து, இலவச சட்ட மையங்களின் நீதிமன்றங்களின் சேவையை பயன்படுத்தி தேவையான பயிற்சி

நடவடிக்கைகளை மனநல மீளாய்வு மன்றத்தின் ஒருங்கிணைப்பின் கீழ் நடத்தப்பட வேண்டும்.

**மன நோயாளிகளுக்கு அவர்களது உள்நோயாளி பிரிவு சிகிச்சைக்கு உடன்பாடு இல்லாத பட்சத்தில் நீலாய்வு மன்றத்தை எவ்வாறு அணுக வேண்டும்?**

- ✧ மன நோயாளிகளுக்கு அவர்களது சிகிச்சை தொடர்பாக உடன்பாடு இல்லாத பட்சத்தில் அந்த உத்தரவுக்கு எதிராக சரியான சிந்திக்கும் திறன் கொண்ட நோயாளிகள் (MENTAL CAPACITY) நேரடியாக இம்மன்றத்தில் மனு தாக்கல் செய்யலாம்.
- ✧ மன நோயாளிக்கு மனத்திறன் இல்லாத பட்சத்தில் நியமிக்கப்பட்ட பிரதிநிதி மூலமாகவும் இம்மன்றத்தில் மனு தாக்கல் செய்யலாம். அவை முக்கிய ஆவணங்களுடன் அம்மன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலும் அந்த ஆவணங்களுடன் அந்த மனநோயாளிக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை எவ்வகையில் சரியில்லை எனவும், எந்த சிகிச்சையில் உடன்பாடு இல்லை என்பதையும் மற்றும் அவருடைய பராமரிப்பு நலன் சம்பந்தமாக குறைபாடு இருந்தால் அந்த குறைபாட்டை குறிப்பிட்டும் விவரிக்க வேண்டும்.
- ✧ மனநல மீளாய்வு மன்றத்திற்கு அனுப்பும் பொழுது முத்திரை (Stamp) தேவையில்லை.
- ✧ இந்த மனுவை பார்த்து தீர்வு காணும் சமயத்தில் மன நோயாளியும், இம்மன்றத்து உறுப்பினர்களான மருத்துவர்கள் மற்றும் நீதிபதி ஆகியோர் அந்த குழுக்களில் உள்ளடங்கி இருக்க வேண்டும்.
- ✧ எந்த அளவிற்கு அந்த மனு சரியாக உள்ளது என்பதன் அடிப்படையில் தீர்வு காணப்பட்டு உத்தரவுகள் பிறப்பிக்கப்படும்.

**மனநல மீளாய்வு மன்ற சட்டப்பிரிவு 89 மற்றும் 90 இன் கீழ் தகவல் அளிக்கப்படும் நோயாளிகளை மனநல மீளாய்வு மன்றத்தின் அதிகாரிகள் எந்த குறிப்பிட்ட நாளுக்குள் மருத்துவமனைக்கு வந்து பார்வையிட வேண்டும்? மேற்குறிப்பிட்ட சட்டப்பிரிவு 89 அல்லது 90 ன் கீழ் விண்ணப்பிக்கப்பட்டுள்ள நோயாளிகளை மனநல மீளாய்வு மன்றத்தின் நபர்கள் பார்க்க இயலவில்லை என்றால் நோயாளிகளின் சட்ட உரிமையை எவ்வாறு நிலைநாட்டுவது?**

- ✧ மனநல மீளாய்வு சட்டப்பிரிவு 89 மற்றும் 90 இன் கீழ் தகவல் அளிக்கப்படும் பொழுது மீளாய்வு மன்றம் நோயாளிகளை பார்வையிடுவதற்கு குறிப்பிட்ட காலக்கெடு ஏதுமில்லை.
- ✧ மருத்துவமனைகள் மற்றும் மனநல காப்பகங்களில் மனநோயாளிகள் சிகிச்சை பெறும் பொழுது சட்டப்பிரிவு 89 மற்றும் 90-ன் கீழ் சிகிச்சைக்கு எதிராக மனநோயாளி தரப்பிலிருந்து மனு (வழக்கு) அளிக்கப்படும் பட்சத்தில் அந்த மனுக்களை உத்தரவு பிறப்பிப்பதற்கு காலக்கெடு உள்ளது. அவ்வாறு சிகிச்சைக்கு எதிராக மனுக்களாக அல்லாமல் சட்டப்பிரிவு 89/90 இன் கீழ் பராமரிக்கப்படும் மனநோயாளி தொடர்புடைய மனுக்கள் 21 நாட்களில் சட்டப்பிரிவு 80(3) - ன்படி தீர்மானம் பிறப்பித்து உத்தரவிட வேண்டும் .
- ✧ சிகிச்சை தொடர்பான மற்ற மனுக்கள் சட்டப்பிரிவு 80 (4) இன் படி 90 நாட்களுக்குள் தீர்வு காணப்பட வேண்டும்.
- ✧ 18 வயதிற்கு கீழ் உள்ளவர்கள் மற்றும் பெண் மன நோயாளிகள் மருத்துவமனைகளிலோ அல்லது மருத்துவ காப்பகங்களிலோ சிகிச்சை மற்றும் பராமரிப்பு காரணமாக உள்நோயாளிகள் பிரிவில் அனுமதிக்கப்படும் நிலையில் இம்மன்றத்திற்கு மூன்று நாட்களில் விண்ணப்பிக்க வேண்டும். மேற்கண்ட இளவர் மனநோயாளிகளுக்கு 30 நாட்களுக்கு மேல் சிகிச்சை அளிக்கப்பட்டால் உடனே இம்மன்றத்திற்கு தெரிவிக்க வேண்டும். SEC 87 (11) & (12) சட்டத்தின் படி இம்மன்றம் 7 நாட்களில் நோயாளியைப் பார்வையிட வேண்டும்.
- ✧ 18 வயதிற்கு கீழ் உள்ள மனநோயாளிகளை பொறுத்தவரை உடனே பார்வையிட்டு ஆய்வு செய்ய உரிமை உள்ளது.
- ✧ மனநோயாளிகள் மனநல மருத்துவமனையிலோ அல்லது மனநல காப்பகத்திலோ அனுமதிக்கப்பட்டு தகவல் இம்மன்றங்களுக்கு தெரிவிக்கப்படும் நிலையில்

அந்த நோயாளியிடம் இருந்தோ அல்லது அவருக்காக நியமிக்கப்பட்ட பிரதிநிதியின் மூலமாகவோ இம்மன்றத்திற்கு மனு அளிக்கப்பட்டுள்ளதா என்பதனை பரிசீலனை செய்து உரிய உத்தரவுகள் பிறப்பிக்கப்படும்.

✧ இந்நோயாளியின் நியமிக்கப்பட்ட பிரதிநிதி (NR) அல்லது கவுன்சில் மூலமாகவோ இம்மன்றத்தில் ஆஜராகி உரிய சட்டப்பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம்.

**ஒரு நோயாளி மருத்துவமனையில் SEC 90 -ன் கீழ் சிகிச்சை எடுத்துக்கொண்டு வரும்பொழுது, தன்னுடைய பாதுகாப்பை கருத்தில் கொள்ளாமல் மனநல சிகிச்சையை இனி உள்நோயாளி பிரிவில் மேற்கொள்வதற்கு தனக்கு விருப்பமில்லை என மன்றத்தின் கீழ் இருக்கும் "முன்கூட்டியே உத்தரவு" என்ற பிரிவில் அந்த மனநோயாளி மனநல மீளாய்வு மன்றத்திற்கு விண்ணப்பித்தால், மனநல மீளாய்வு மன்றம் நோயாளியின் உரிமையை பாதுகாக்குமா? அல்லது நோயாளியின் விருப்பத்தை நிலை நாட்டுமா?**

✧ 2017 சட்டத்தின் கீழ் ஒரு மன நோயாளி சிகிச்சை எடுத்துக் கொள்வதற்கு முன்கூட்டியே உத்தரவு ஏற்படுத்தப்பட்டு இருந்தால் அதன்படி சிகிச்சை பெறுவதற்கு அவருக்கு உரிமை உண்டு. அதே நேரத்தில் நோயாளியின் நோயின் தன்மை பரிசீலனை செய்யப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டு அவருக்கு Capacity Assessment செய்யப்பட வேண்டும்.

✧ நோயாளியின் நலனுக்கு எதிராக அவரே செயல்படும் பொழுது அவருக்காக நியமனம் செய்யப்பட்ட பிரதிநிதி நோயாளியிடம் நோயின் தன்மையை எடுத்துரைக்க வேண்டும்.

✧ தேவைப்படும் பட்சத்தில் மனநோயாளியின் சிகிச்சை நலன் சம்பந்தமாக தகுந்த சட்டப்பூர்வமான முடிவுகளை நியமிக்கப்பட்ட பிரதிநிதி எடுக்கலாம்.

✧ இந்த முன்கூட்டியே உத்தரவின் முடிவுகளை பார்த்து நோயின் தன்மை பொறுத்து அவற்றை மாற்றுவதற்கும் மற்றும் தடை செய்வதற்கும் இம்மன்றத்திற்கு அதிகாரம் உள்ளது.

✧ மனநோயாளியின் முன்கூட்டியே சிகிச்சை உத்தரவு சம்பந்தமாக நோயாளியை பார்வையிட்டும் மருத்துவர்கள் மற்றும் இம்மன்றத்தின் உறுப்பினர்கள் மருத்துவமனையின் ஆவணங்களைப் பார்வையிட்டும் அவருக்கு தொடர் சிகிச்சை அளிக்க வேண்டுமா என்பதை மன்றம் பரிசீலனை செய்து உத்தரவு பிறப்பிக்கலாம்.

## முடிவுரை:

மனநோயாளியின் நலன், சிகிச்சை மற்றும் பராமரிப்பு ஆகியவற்றை சமுதாயத்தில் அவர்கள் வாழ்வதற்கான உரிமையைக் கொடுக்க வேண்டும் என்பதை உறுதி செய்வதற்காக 2017-ஆம் ஆண்டு மனநல பாதுகாப்புச் சட்டம் அமல்படுத்தப்பட்டது. தன்னிலையை சரியாக உணர முடியாத மனநோயாளிகளுக்கு சிகிச்சை மற்றும் பராமரிப்பு கொடுப்பது என்பது மிகப்பெரிய சேவை மற்றும் அர்ப்பணிப்பு ஆகும். எனவே மனநோயாளிகளின் நலனை கையாளும் மருத்துவமனைகள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவை சேவை மனப்பான்மையோடு செயல்பட வேண்டும். ஒரு சில மருத்துவமனைகள் அல்லது நிறுவனங்களில் தவறுகள் நடந்துள்ளது என்பதினால், எல்லா மருத்துவமனைகளிலும் தவறு நடப்பதாக தீர்மானிக்க இயலாது. எதிர்காலத்திலும் மனநோயாளிகளுக்கு சிறந்த சேவையை அர்ப்பணிப்பு உணர்வோடு சிகிச்சையை அளிக்க வேண்டும் என்பதே இம்மன்றத்தின் வேண்டுகோள் மற்றும் விருப்பம் ஆகும்.

**References:**

https://www.indiacode.nic.in/bitstream/123456789/2249/1/A2017-10.pdf